பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 12 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் அரசியல் சாசனத்தின் மாண்புகளை நிறைவேற்றும் என பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. ஸ்ரீஹரிகோட்டா சதிஷ் தவான் ஏவுதளத்திலிருந்து பி எஸ் எல் வி –சி-51 ராக்கெட் மூலம் **proba**-3 செயற்கைக்கோளகள் நாளை மாலை விண்ணில் செலுத்தப்படுகிறது.
3. பெஞ்ஜல் புயல் மற்றும் மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிவாரணம் மற்றும் இழப்பீடுகளை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
4. நீலகிரி, தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.,
5. குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

**[]<<<>>>[]**

புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் அரசியல் சாசனத்தின் மாண்புகளை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

சண்டிகரில் இன்று புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டதற்கான நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர்,ஆங்கிலேயர் காலத்தில் கொண்டுவரப்பட்ட பழைய சட்டங்களின் பிடியிலிருந்து இந்தியா மீண்டுள்ளதாகக் கூறினார்.

சண்டிகரில் புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்களை சிறப்பாக செயல்பாட்டுக்கு கொண்டு வந்த பஞ்சாப், ஹரியானா உயர்நீதிமன்றத்திற்கும், வழக்கறிஞர்களுக்கும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதாகக் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

இந்நிகழச்சியில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, மூன்று குற்றவியல் நடைமுறைச் சட்டங்களும் நாடு முழுவதும் மூன்று ஆண்டுகளுக்குள் முழுமையாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று கூறினார்.

புதிய சட்டங்கள் இந்திய மக்களுக்காக நாடாளுமன்றத்தில் உருவாக்கப்பட்டவை என்றும், மக்களுக்கான நீதியை இவை உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக மூன்று குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் தொடர்பான கண்காட்சியை திரு நரேந்திரமோடியும், திரு அமித்ஷாவும் பார்வையிட்டனர்.

[]<<<>>>[]

ஸ்ரீஹரிகோட்டா சதிஷ் தவான் ஏவுதளத்திலிருந்து பி எஸ் எல் வி —சி-51 ராக்கெட் மூலம் ப்ரோபா-மூன்று செயற்கைக்கோள் நாளை மாலை நான்கு மணி எட்டு நிமிடத்திற்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

ஐரோப்பிய விண்வெளி முகமையின் இந்த செயற்கைக்கோள்கள் பூமியிலிருந்து மிகவும் உயரமான சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

நியூஸ் ஸ்பேஸ் இந்தியா நிறுவனத்தின் மூலம் ஐரோப்பிய விண்வெளி முகமையிடமிருந்து இதற்கான ஒப்பந்தத்தைப் பெற்று வர்த்தக ரீதியாக இஸ்ரோ விண்வெளியில் இந்த செயற்கைக் கோள்களை செலுத்துவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சுற்றுவட்டப் பாதைக்கு சென்றவுடன் இரண்டு செயற்கைக் கோள்களாக பிரிந்து சூரியனின் க்ரோனா மற்றும் அதனை சுற்றியுள்ளப் பகுதியையும்,. சூரியனின் அனல்காற்று குறித்த தகவல்களையும் இந்த செயற்கைகோள்கள் அளிக்கும்.

[]<<<>>>[]

விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பெஞ்ஜல் புயல் மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மாநில அரசு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், சேதமடைந்த குடிசைகளுக்கு பத்தாயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படும் என்றும், முழுமையாக சேதடைந்த குடிசைகளுக்கு மாநில அரசின் திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்லாண்டு பயிர்கள் மற்றும் மரங்களுக்கு இழப்பீடாக ஹெக்டேருக்கு 22 ஆயிரத்து 500 ரூபாயும், மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேருக்கு எட்டாயிரத்து 500 ரூபாயும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எருது மற்றும் பசு உள்ளிட்ட கால்நடைகளின் உயிரிழப்புக்கு நிவாரணமாக 37 ஆயிரத்து 500 ரூபாயும்,

வெள்ளாடு, செம்மெரி ஆடு உயிரிழப்புக்கு நாலாயிரம் ரூபாயும் நிவாரணம் வழங்கப்படும்.

விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் இரண்டாயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஆதார் அட்டை ஆகியவற்றை இழந்தவர்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்திய சான்றிதழ் வழங்கப்படும் என்றும்,

பாடப்புத்தங்களை இழந்த மாணவ மாணவியருக்கு புதிய பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்படும் என்றும் மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

வீழுப்புரம் மாவட்டத்தில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரான மின் விநியோகம் வழங்கிடுவதற்கான சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் புயலால் மின்விநியோகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆய்வு செய்த அமைச்சர், பிற மாவட்டங்களிலிருந்து தொள்ளாயிரம் மின்கள பணியாளர்கள் விழுப்புரம் மாவட்டத்திற்கு வரவழைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாகக் கூறினார்.

இம்மாவட்டத்தில் உள்ள ஏழு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின் இணைப்புகளில் 24 ஆயிரம் வீடுகளுக்கு மழை காரணமாக மின் இணைப்பு நிறுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

மழைநீர் இன்று இரவுக்குள் வடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதால் படிப்படியாக மின் இணைப்பு தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு செந்தில்பாலாஜி கூறினார்.,

[]<<<>>>[]

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாநில அமைச்சர் திரு முத்துசாமி இன்று நேரில் பார்வையிட்டார்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஊத்தங்கரை, போச்சம்பள்ளி பகுதிகளில் 600-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மழையால் பாதிக்கப்பட்டதாகவும், 50-க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்ததாகவும் கூறினார்.

15 இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

சேதமடைந்த பயிர்கள், வாகனங்கள் மற்றும் உடைமைகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு முத்துசாமி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மாணவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு உயர்கல்வித் துறையில் பல மாற்றங்களை மாநில அரசு செய்து வருவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோ வி செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் விளைவு அடிப்படையிலான கல்வி பயிலரங்கை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர், 2030-க்குள் 50 சதவீதம் பேர் உயர்கல்வி பெற வேண்டும் என்ற நாட்டின் இலக்கை எட்டுவதற்கு மாநில அரசு உரிய பங்களிப்பை செய்து வருவதாகக் கூறினார்.

மாணவர்களின் திறனை மேம்படுத்துவதற்கு இந்த பயிலரங்கம் உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

மாணவர்களை தன்னம்பிக்கையுடன் தொழில் முனைவோர்களாக உருவாக்குவதற்கான முயற்சிகளை மாநில அரசு எடுத்து வருவதாகவும் திரு கோ வி செழியன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகள் அருவிகளில் குளிப்பதற்கும் பரிசல் இயக்குவதற்கும் மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தண்டபாணி ) -36-- செகண்ட்*

**[]<<<>>>[]**

நீலகிரி, கோவை, ஈரோடு மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க ) --- 56 செகண்ட்*

இதனிடையே விழுப்புரம் மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக அனைத்து பள்ளி கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு கொசஸ்தலை ஆற்றுப் பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் இந்த பகுதியில் உள்ள மக்கள் ஆற்றுப் பகுதிக்கு அருகில் செல்ல வேண்டாம் என வருவாய்த்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

**[]<<<>>>[]**

நாமக்கல் மாவட்டம் திருமணிமுத்தாற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக பில்லூர், ராமதேவம் உள்ளிட்ட பகுதிகளில் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தருமபுரி மாவட்டம் தொப்பூர் அருகே காட்டாற்றின் நடுவே சிக்கிக் கொண்ட நபரை தீயணைப்புத் துறையினர் பத்திரமாக மீட்டனர்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதியில் பெய்த மழை காரணமாக தொரடிப்பட்டு மணலாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

பெரம்பலூர் மாவட்டம் அரும்பாவூர் பெரிய ஏரியில் உடைப்பு ஏற்பட்டதன் காரணமாக பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பயிர்களை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சவ் இன்று பார்வையிட்டார்.

**[]<<<>>>[]**

குவாஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

இன்று நடைபெற்ற ஆட்டங்களில் இந்தியாவின் தருண் மனப்பள்ளி, பாரத் ராகவ், ரகு மாரிசாமி ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**

ஆசிய மகளிர் ஹேண்ட்பால் சாம்பியன் போட்டி தில்லியில் இன்று தொடங்கியது.

இந்தியா - ஹாங்காங் இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

**[]<<<>>>[]**

ஆசிய ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இன்று இந்தியா - மலேசியாவை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்கும்.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பெங்களூரு அணி – குஜராத் அணியையும், புனே அணி – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**